# Tamil Nadu Electricity Board Engineers' Association

(Recognized in G.O. NO. 854 dated 6-4-1946)
Regn. No.217/94
'Electricity Avenue', 144, Anna Salai, Chennai - 600 002, Off: 044 - 2852 0731
Web : tnebengineers.in, email : tnebea@gmail.com, tnebengineers.com, Fax : 044 - 2851 7307


பெறுநர்
**மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள்,**
தமிழக அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - **600 009.**

**மடல் எண்: த.நா.மி.வா.பொ.க /பொது.செ. / எண்-060 / 2014, தேதி 19. 07. 2014.:**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கு,
வணக்கம்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு **(Per) FB. TANGEDCO Proceedings No.14 dated 17.5.2013**- ன் படி நேரடித் தேர்வின் மூலம் 275 உதவிப்பொறியாளர்களை நியமித்தமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர் கழகம் தமது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது..

அதேவேளையில், வாரியத்தில் 600க்கும் மேற்பட்ட உதவி பொறியாளர்கள் (மின்னியல்), 150க்கும் மேற்பட்ட உதவி பொறியாளர்கள்(சீரியல்) மற்றும் 100 உதவிப் பொறியாளர் (இயந்திரவியல்) காலி இடங்கள் இருப்பதைக் கருத்தில் கொண்டு, 2014ஆம் ஆண்டுக்கான நேரடி உதவிப் பொறியாளர்கள் பணி நியமனத்திற்கான பணிகளைத் தொடங்கிட உரிய அறிவுரை வழங்கிடுமாறு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களைப் பொறியாளர் கழகம் பணிவன்போடு வேண்டிக் கொள்கிறது.

மேலும், கடந்த ஆண்டு நியமிக்கப்பட்ட புதிய உதவிப்பொறியாளர்களின் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கட்கு நன்றி பாராட்டும் விழாவினை நடத்திட மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை தேதி ஒதுக்கித் தரும்படியும் மின்வாரியப் பொறியாளர் கழகம் அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள,
19/07/14
(சீனி. சங்கர நாராயணன்)
பொதுச் செயலாளர்.